C.C. 96 / 21
P.W.1
பத்மநாபன்
Date 4.3.2023

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நானும் எதிரியும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் பத்தாம்வகுப்பு படித்துள்ளேன். என் குடும்ப உறுப்பினர்கள் எத்தனை பேர் என்றால் ஐந்து பேர்கள். கல்யாணம் முடிந்த மூன்றுபெண்கள், மனைவி மற்றும் நான். கல்யாணம் முடிந்த பெண்கள் எங்கு இருக்கிறார்கள் என்றால் இரண்டு பெண்கள் யுகேவிலும், ஒரு பெண் பெங்களூரிலும் உள்ளார். நானும் என் மனைவியும் என் பெண்களை பார்க்க யுகேவிற்கு செல்வோம் என்றால் செல்வோம். எதிரி ஏகாலி சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி என்ன வேலை பார்க்கிறார் என்றால் பயர் ஒர்க்சில் கான்ட்ராக்ட் வேலை செய்து வருகிறார். எதிரி பயர் ஒர்க்சில் கான்ட்ராக்ட் எடுத்து வேலை செய்து வருகிறார் என்றும் பயர்ஒர்க்சின் பெயரின் விபரத்தை நான் என் புகார்மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் வேலை சம்பந்தமான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) எதிரி என்ன காரணத்திற்காக என்னிடம் கடன்வாங்கினார் என்றால் அவர்கள் குடும்ப செலவிற்கும், தொழில் அபிவிருத்திக்காவும் வாங்கினார். ஐந்து லட்சம் கடனுக்கு புரோநோட்டை தவிர வேறு எந்த ஆவணமும் எதிரியிடமிருந்து பெறவில்லை என்றால் சரிதான். ஐந்து லட்சம் கடன் வாங்குவதற்கு முன்பு எதிரிக்கும் எனக்கும் ஏதேனும் பண பரிவர்த்தனை இருந்ததா என்றால் இல்லை. எதிரி ரூ5 லட்சத்திற்கு வட்டி கொடுக்கவில்லை என்றால் சரிதான். 29.7.2018 முதல் இந்த வழக்கு தாக்கல் செய்த தேதிவரை எவ்வளவு வட்டி வரவேண்டும் என்ற விபரத்தை எனது புகார்மனுவில் குறிப்பிட்டுசொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. எவ்வளவு வட்டி வரவேண்டும் என்றால் கணக்குபோட்டு பார்த்தால் தான் தெரியும். வட்டி கொடுப்பதற்கு அரசிடமிருந்து ஏதேனும் அனுமதி பெற்று சான்று வைத்துள்ளேனா என்றால் இல்லை.

3) இரண்டு காசோலைகள் எங்கு வைத்து எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தார். அப்போது யார் யார் உடன்

இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். இரண்டு காசோலைகளும் யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் எதிரியே எழுதி கொண்டு வந்து கொடுத்தார். காசோலையில் என்ன என்ன எழுதி இருந்தது என்றால் ஒவ்வொரு காசோலையிலும் பணம் ரூ1 லட்சமும், பெயர் இருந்தது. மேற்படி விபரத்தை தவிர வேறு எதுவும் காசோலையில் எழுதவில்லை என்றால் எழுதவில்லை. தேதி குறிப்பிடவில்லை என்றால் தேதி குறிப்பிட்டிருந்தது.

4) எதிரி எதற்காக இரண்டு காசோலைகளை கொடுத்தார் என்றால் வட்டிக்காவும், மீதம் உள்ள தொகையை அசலுடன் வரவு வைத்துக்கொள்ளுமாறு கொடுத்தார். இரண்டு காசோலைகளில் உள்ள கையெழுத்துக்களுக்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி இரண்டு காசோலைகளில் உள்ள கையெழுத்துக்கள் வித்தியாசமாக உள்ளது என்றும் ஒன்று போல் இல்லை என்றால் சரியல்ல. காசோலைகளை கையெழுத்து நிபுணர்களிடம் அனுப்பி தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எந்த தேதியில் இரண்டு காசோலைகளை கொடுத்தார் என்றால் 25.1.2021 ம் தேதி அன்று கொடுத்தார். முதல் காசோலை வசூலுக்கு போட்ட பின்பு எப்போது திருப்பப்பட்டது என்றால் அன்றையதேதியிலேயே திரும்பிவிட்டது. காசோலை திருப்பப்பட்ட பின்பு எதிரியிடம் சென்று காசோலை குறித்து கேட்டேனா என்றால் இல்லை. என் வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் 20 மீ தொலைவு தான் இருக்கும் என்றால் சரிதான்.

5) முதல் காசோலை திருப்பப்பட்ட ஒரு நாள் கழித்து மற்றோரு காசோலை வசூலுக்கு போடுவதற்கு என்ன காரணம் என்றால் வங்கியில் பணம் இருந்திருக்கலாம் என்று வசூலுக்கு போட்டேன். முதல் காசோலை திருப்பப்பட்ட பின்பு எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இரண்டாவது காசோலையை வசூலுக்கு போட்டேன் என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தில் எதிரியின் மீது ஓஎஸ் 45/2021 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அந்த வழக்கில் தாக்கல் செய்த மனுவை தான் புசாஆ 10 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புசாஆ 10 ஆவணத்தில் 3வது பேராவில் ஐந்தாவது வரியில் Plaintiff being part payment of dues என்று குறிப்பிட்டுள்ளது அதன் அர்த்தம் என்னவென்றால் அர்த்தம் தெரியவில்லை. புசாஆ 10 ல் உள்ள விபரத்தை நான் வழக்கறிஞரிடம் சொல்லி தான் தயார் செய்தார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை படித்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

6) எனக்கு எதிரி எத்தனை மாதம் தவணை கொடுக்கவேண்டும் என்று புசாஆ 10 குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மாத தவணை கொடுக்கவேண்டும் இந்த புகார்மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஐந்துலட்சத்திற்கு 1 சதவீத வட்டி என்றால் ஒன்றரை லட்சம் வருகிறது என்றால் கணக்கு போட்டு பார்ததால் தான் தெரியும். ஓஎஸ் 45/2021 என்ற அசல் வழக்கை எதிரி தாக்கல் செய்த எதிர்உரையில் கடன் உறுதிசீட்டு மற்றும் காசோலைகள் பொய்யாக உற்பத்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் குறிப்பிட்டுள்ளது, ஆனால் மோசடி செய்யவில்லை. எதிரிதரப்பில் ஓஎஸ் 45/2021 என்ற அசல் வழக்கில் எதிரி தாக்கல் செய்த எதிர்வழக்கு உரை எதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் கடன்உறுதிசீட்டு மற்றும் காசோலைகள் பொய்யாக உற்பத்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது, ஆனால் நான் மோசடி செய்யவில்லை.

7) ஜனவரி மாதம் 2021 ம் ஆண்டு நான் யுகேவில் உள்ள என் பெண்கள் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல.எனது பாஸ்போர்ட்டை தாக்கல் செய்தேன் என்றால் நான் ஜனவரி மாதம் 2021 ம் வருடத்தில் எங்குஇருந்தேன் என்று தெரியவரும் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தும்நபர் என்றால் இல்லை. நான் திருத்தங்கல் பத்மநாபன் ஐடிஐ தொழிற்பயிற்சியில் நான் ஒரு பங்குதாரரா அல்லது தலைவரா என்றால் நான் பொறுப்பாளர். எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை பொறுப்பாளராக இருந்தேன் என்றால் 1996 லிருந்து 2010 வரை பொறுப்பாளராக இருந்தேன். மேற்படி விபரத்தை என் புகார்மனுவிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தின் பொருளாளராக இருப்பதால் நான் கண்டிப்பாக வருமான வரி செலுத்திஇருப்பேன் என்றால் இல்லை.

8) 2010 லிருந்து தற்போது வரை என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். விவசாயத்திலிருந்து எவ்வளவு வருமானம் வரும் என்றால் வருடத்திற்கு ரூ2 லட்சம் வரும். விவசாயம் செய்யும் போது மாத மாதம் என் தேவைக்கு என் பெண்கள் பணம் அனுப்புவார்கள் என்றால் சரிதான்.என் மருத்துவ செலவிற்கு கேட்டாலும் கொடுப்பார்கள் என்றால் சரிதான். எதிரி என்னிடம் ரூ5 லட்சம் கடன் பெறுவதற்கு அவருக்கு தகுதி இல்லை

என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் ரூ5 லட்சம் கடன் கொடுப்பதற்கு எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. நான் எனது இடத்தை விற்று பணம் வைத்திருந்து அதிலிருந்து கொடுத்தேன். நான் இடத்தை விற்கு பணம் வைத்திருந்த விபரத்தை என் புகார்மனுவிலும், அறிவிப்பிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த நிலத்தை விற்றேன் என்றால் பந்தல்குடி பக்கத்தில் மெட்டில்பட்டி கிராமத்தில் இருந்த இடத்தை விற்றேன். பத்திரத்தை பார்த்தால் நான் எவ்வளவு ரூபாய்க்கு விற்றேன் என்பது தெரியவரும் என்றால் சரிதான். எவ்வளவு ரூபாய்க்கு விற்றேன் என்றால் பத்துலட்சத்திற்கு மேல் விற்றேன்.மேற்படி பணத்தை நான் வங்கியில் அல்லது கையில் வைத்திருந்தேனா என்றால் பாதி பணத்தை கூட்டுறவு வங்கியில் வைத்திருந்தேன், பாதிபணத்தை அவசர தேவைக்காக என் பெண்களிடம் கொடுத்தேன்.கூட்டுறவு வங்கியில் வைத்திருந்த பணத்தை எடுத்துவிட்டேன்.

9) எதிரிக்கு வங்கியில் வைத்திருந்த ரூ 5 லட்சத்தை கொடுத்தேனா என்றால் இல்லை, கையில் வைத்திருந்த பணத்தில் கொடுத்தேன். கூட்டுறவு வங்கியிலிருந்த எந்த தேதியில் இருந்து எவ்வளவு பணம் எடுத்தேன் என்றால் கணக்கு வழக்கை பார்த்தால் தான் தெரியும். அவ்வாறு எடுக்கப்பட்ட தொகையை தான் எதிரியிடம் கொடுத்தேன் என்றால் இல்லை. என் தேவைக்கே என் பெண்களிடம் இருந்து தான் செலவுக்கு வாங்கப்படவேண்டிய சூழ்நிலையில் இருந்து வந்த நிலையில் எதிரிக்கு நான் கையில் வைத்திருந்த பணத்தை கொடுத்தேன் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் ஐந்து வங்கியில் கணக்கு உள்ளது. ஐசிஐசி வங்கி, ஸ்டேட் பாங்க், பாண்டியன் கிராமா பேங்க், கோஆப்பரேட்டிவ் வங்கி, சென்ட்ரல் கோஆப்பரேட்டிவ் வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். ஐந்து வங்கியின் பரிவர்த்தனைகளை பார்த்தால் நான் வருமானவரி செலுத்துகிறேனா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். எதிரி என்னிடம் ரூ50000 கைமாற்றுக்கடனாக எதிரி பெண் திருமணத்திற்கு பெற்றார் என்றும் அந்த பணத்தை எதிரியும் அவரது மனைவி மற்றும் உறவினரும் வந்து என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

10) மேற்படி தொகைக்கு தான் எதிரி எனக்கு வெற்றுக்காசோலை கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி நிரப்பப்படாமல் கொடுத்த காசோலையை தான் போலியாக உற்பத்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. உண்மையிலேயே எதிரி என்னிடம் காசோலையில்

குறிப்பிட்டுள்ள தொகை பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி பயர்ஒர்க்சில் அன்றாட கூலி வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல, பத்து நபர்கள் வைத்து கான்ட்ராக்ட் வேலை செய்து வருகிறார். எதிரி எந்த பயர்ஒர்க்சில் வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாததால் அவர் தொழில் அபிவிருத்திக்காகவும் பணம் வாங்கினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.